**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 69 /2013**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW 9 / PW 2 |
| Name | : ராமு |
| Father's Name | : நடராஜன் |
| Village | : பருவூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2022.

**முதல் விசாரணை –**

நான் தற்போது விவசாயம் வேலை செய்கிறேன். கடந்த 10.06.2011 தேதி நான் சொந்த வேலையாக ஊரப்பாக்கத்திலிருந்து வண்டலுருக்கு சென்று கொண்டிருந்தேன். காலை சுமாா 10.45 மணியளவில் தேசிய நெடுஞ்சாலையில் அசோக பாடிவாட்ஸ் என்ற இடத்திற்கு அருகில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் என்னவென்று பார்த்தபோது பாலன் என்பவர் அந்த இடத்தை பற்றி போலிசாரிடம் சொல்லிகொண்டிருந்தார். மேலும் போலிசார் என்னிடம் மேற்படி இடத்தில் நடந்த நில மேசடி சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். போலிசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அந்த மகசரில் நானும், பாலன் என்பவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகசரானது அசா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி 3 மற்றும் 4**

ஆஜரில் இருக்கு எதிரி 4னை எனக்கு தெரியாது. இந்த இடத்தில் உரிமையாளர் பகவன் சிங். எதிரி செல்வதுரையை எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை எதிரி 1 மற்றும் 2**

இந்த வழக்கு சம்பந்தமாக புகார் யார் எப்பொழுது கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். போலிசார் என்னிடம் செல்வதுரை என்பவர் நில மேசடி செய்தாக சொல்லி அங்கு வரைபடம் மற்றும் பார்வை மகசர் வரைந்து கொண்டிருந்தனர். என்னை சாட்சியாக இருக்க கேட்டு கொண்டதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன். படித்து பார்த்து நான் கையொப்பம் செய்யவில்லை. புகார் தாரர் எனக்கு பணம் தருவார் என்பதனால் அவருக்கு அனுசரனையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு நேரடியாக தெரியாது.

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.